பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# ...நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்...

ரோமர் 15:5

செய்தி மலர்
2015
ஆகஸ்ட்

இதழ் : 3
மலர் : 16



# தலைவர் உரை



**கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகட்கு! ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.**

தேவனுடைய பெரிதான கிருபையால் 2015–ம் வருடத்தில் 8 வது மாதத்தை காணும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்தபடியால் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

கடந்த மாதத்தில் நடந்த சபையின் ஆராதனைகள், மற்றும் சபை ஊழியங்களில், தேவனின் வழிநடத்துதலும் மகிமையும் இருந்தபடியால் தேவனுக்கு மகிமை செலுத்துவோம்.

நம் ஒவ்வொருவருடைய தனிபட்ட வாழ்க்கையிலும் தேவவழி நடத்துதல் இருந்த படியினாலும், நம்முடைய ஜெபத்திற்கு மேலாய் தேவன் நம்மை ஆசீரவதித்த படியினாலும் அவருக்கு நன்றி செலுத்தி துதிக்கிறேன்.

சபையின் இந்த வருட வாக்குத்தத்தின்படியே **"நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்"** என்று இந்த நாள் வரை நம்மோடு தேவன் இருந்து நம்மை காத்து வழிநடத்துகிறார்.

ரோமர் 15 ஆம் அதிகாரத்தில் நம்முடைய தேவனை குறித்து இவ்வாறாக எழுதப்பட்டிருக்கிறது.

### 1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்:(ரோமர் 15:5)

நமக்காய் கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்தி ஜீவன் தந்த இயேசுவின் பிதாவாகிய தேவன் அவர், நமக்காய் இரத்தம் சிந்தினார் என்று நாம் விசுவாசிக்கும் போது, நாமும் அவருடைய பிள்ளைகளாய் உள்ளத்தில் மறுபிறப்பு அடைகிறோம். அவர் நாம் எல்லோருக்கும் பிதாவானவர். பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நன்மையானதை கொடுக்கும் போது, பரம பிதாவானவர் நன்மையானதை கேட்கும் பொழுது அதை கொடுப்பது அதிக நிச்சயம். நமக்கு எவைகள் நன்மையானவை என்று தேவன் அறிந்திருக்கிறார்.

சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும் கர்த்தரை தேடுகிறவர்களுக்கே ஒரு நன்மையும் குறைவுபடாது.

### 2, பொருமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன். (ரோமர் 15:6)

அவர் நமக்கு பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கிற தேவனாய் இருக்கிறார். அநேக காரியங்களில் பொறுமை இல்லாமல், மனபதற்றத்தில் பேசிவருகிறோம், அநேக காரியங்களை செய்தும் வருகிறோம், அதன் பின்

ஆறுதல் இல்லாமல் கலங்கி திரிகிறோம். இந்த மாதத்தில் தேவனை நோக்கி பார்ப்போம், அவர் பொறுமையையும் தருகிறார், ஆறுதலையும் அளிக்கிறார். அவர் எவ்வளவு பொறுமையையும் ஆறுதலையும் தருகிறார் என்றால், அது கிறிஸ்து இயேசுவின் மகிமையின்படி என்கிறார். (ரோமர் 15:6)

3. நம்பிக்கையின் தேவன் (ரோமர் 15:13)

விசுவாசத்தில் உண்டாகும் நம்பிக்கையை அவருக்கு தருகிறார். நமக்காய் எல்லாவற்றையும் சிலுவையில் ஜெயமாக மாற்றிவிட்டார். இனி தோல்வி இல்லை, சாத்தானை சிலுவையின் காலின் கீழ் நசுக்கிவிட்டார், பிசாசின் தொந்தரவு, வியாதி,சாபம் பாவம், எல்லவற்றையும் சிலுவையில் முறித்துவிட்டார். அதை விசுவாசிக்கும் போது நம்மில் நம்பிக்கை பெருகும்,

சமாதானத்தின் தேவன் (ரோமர் 15:33)

அவர் சமாதானத்தின் தேவன், எல்லோருக்கும் சமாதானமாகும்படி செய்கிறார், அது மாத்திரமல்ல அவருக்கு துரோகிகளாய் இருந்த நம்மையும் சிலுவையின் இரத்தத்தால் (இயேசுவின்) நம்மை அவரோடு ஒப்புரவாக்கி கொண்டார். சமாதான வாழ்க்கையை நமக்கு அவரோடு உருவாக்கினார். பகையாக நின்ற நடுச்சுவரை தகர்த்து விட்டார். சமாதனமில்லாமல் இருந்த நம் உள்ளத்தில் சமாதானத்தை தந்திருக்கிறார்.

இந்த மாதம் அவருடைய இந்த குணாதிசயங்களை சொல்லி அவரை துதிப்போம், சமாதானத்தின் தேவன் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக!. ஆமென்.!

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

2015 ஆம் ஆண்டின் சபையின் வாக்குத்தத்தம்

........நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.

(ஆமோஸ் 5:14)

## வேண்டதல்களை அருளுகிற தேவன்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசுவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாத இதழ் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் இயேசுவின் நாமத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் கிருபை செய்வாராக!

உன் இருதயத்தின் வேண்டதள்களை அருள் செய்வார்.

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் (சங் 37:4)

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவனுடைய பிள்ளைகளே! தேவன் இந்த வேண்டுதலை கேட்டு அருள் செய்ய மாட்டாரா ! என்று நாம் காத்திருக்க கூடும். தேவனுடைய வார்த்தை கூறுகிறது. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு அவர் உன் இருதயத்தின் வேண்டதல்களை நிறைவேற்றுவார் என்று.

இதிலிருந்து நாம் தெளிவாய் புரிந்து கொள்ளலாம். நாம் கர்த்தரிடத்தில் மனமகிழச்சியாய் இருக்கும் போது நிச்சயமாய் நம்முடைய வேண்தல்களை நிறைவேற்றுவார்.

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு என்பது. தேவனுடைய சமூகத்தில் நாம் இருந்து, அவற்றுடன் சத்தியத்தையும், தேவனுடைய வார்த்தையின் நீதியையும், நம்முடைய மனதிலே அவைகளை குறித்து சந்தோஷத்தை அனுபவிப்பதே ஆகும்.

இவ்வாறாக நாம் மனமகிழ்சியாய் இருக்கும்போது தேவன் நம்முடைய இருதயங்களில் விருப்பங்களை வைத்து அதை அவரே நிறைவேற்ற செய்கிறார். இதை பிலி 2 : 13ல் வாசிக்கலாம். தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குபவராய் இருக்கிறார்.

அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்.(1 இராஜா 3:9)

ஒரு நாள் கர்த்தர் கிபியோனிலே ராஜாவாகிய சாலொமோனுக்கு தரிசனமாகிறார். நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். அப்பொது சாலொமோன் இஸ்ரவேல் ஜனங்களை நியாயந்தீர்க்க ஞானமுள்ள இருதயத்தை கேட்டார். தேவன் அவருடைய விருப்பத்தின்படி ஞானமுள்ள இருதயத்தை கொடுத்தார்.

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவனுடைய பிள்ளைகளே, யோசித்து பாருங்கள், சாலொமோன் சிறுவயதி தொடங்கி ராஜகுமாரனாய் அரண்மனையில் வளர்ந்து வந்தவன், ராஜாவுக்குறிய அனைத்து பயிற்சிகளையும் நிச்சயமாய் கற்று தேர்ச்சி பெற்றவனாய் இருந்திருக்க கூடும், ஆனாலும் தேவனுடைய சமூகத்தில் தன்னை ஒப்பு கொடுத்து நான் போக்கு வரவு தெரியாத சிறுவனாய் இருக்கிறேன் என்கிறான். சாலொமோனுடைய விண்ணப்பம் தேவனுடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாக இருந்தது. தன்னுடைய நியாயம் சரியாய் இருக்க வேண்டும் என்று விரும்பினான். தேவன் நிறைவேற்றினார்.

இது போல நாமும் நம்முடைய ஸ்தானங்களில் சரியாய் நடக்க தேவனிடத்தில் கேட்கும் போது நிச்சயமாய் செய்வார். சாலொமோன் தன்னுடைய அரசாட்சியில் யாரும் நியாயத்தில் குறைவுபட கூடாது. அவர்கள் பொருள் இருக்கிறவர்களாக இருந்தாலும், இல்லாதவர்காக இருந்தாலும், ஒரே மாதிரியாக நியாயாம் தீர்க்கபட வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாய் இருந்தது. இதனால் அவனுடைய ஞானத்தை கண்டு சேபாஸ்திரி அநேக வெகுமதிகளை எடுத்துக் கொண்டுவந்த சாலொமோனை கண்டு சந்தோஷப்பட்டாள்.இது

போல நாமும் தேவனிடத்தில் கேட்கும் பொழுது அவர் நம்முடைய வேண்டுதல்களை நமக்கு அருள் செய்வார்.

## இரட்டிப்பான ஆவியின் வரங்கள்.

எலியாவின் உடன் ஊழியகாரனாய் எலிசா இருந்து வந்தார், ஒரு நாள் எலியா பரலோகம் எடுத்து கொள்ளப்படுவதை அறிந்து கொண்டார் எலிசா. அப்பொழுது எலியா எலிசாவை நோக்கி நான் உன்னை விட்டு எடுத்த கொள்ளும்படும் முன்னே நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன? என்று கேட்கும் போது, எலிசா இவ்வாறாக கூறுகிறார். "உம்மிடத்தில் உள்ள ஆவியின் வரம் இரட்டிப்பாய் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" என்றான்.(2 இராஜா 2:9) எலிசாவின் இருதயத்தின் வேண்டுதலை தேவன் நிறைவேற்றினார். எலியா செய்த அற்புதங்கள் மொத்தம் 7 ஆனால் எலிசா செய்த அற்புதங்களோ மொத்தம் 14.

அதி நவீன விஞ்ஞான காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம் . இன்றைய நாட்களில் ஒவ்வொரு கிறிஸ்த்தவரும் ஆவியின் வரங்கள் அவசியமானதாய் காணப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழதும் போது " நீங்கள் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால் சபைக்கு பக்தி விருக்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள் (1 கொரி 14:12)என்கிறார். எனவே தேவனுடைய பிள்ளைகளாகிய நாம்,எலிசா,எலியாவை பின்பற்றியது போல நாமும் நம்முடைய தேவனாகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் போது நமக்கும் தேவன் இப்படிபட்ட ஆவியின் வரங்களை தருவார் என்பது நிச்சயம். நிச்சயமாக அப்படிபட்ட வாஞ்சையுள்ள இருதயமுள்ள தேவனுடைய பிள்ளைகளின் மன வேண்டுதல்களை தேவன் அருள் செய்வார்.

## இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும்.

இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது.(ரோமர் 10:1)

அப். பவுல் இஸ்ரவேலர்கள் இரட்சிக்கபட வேண்டுமே என்கிற ஒரு அலாதி விருப்பத்தோடு காணப்பட்டார்.

இன்றைய நாட்களில் நாம் அடுத்தவர்கள் இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டும், இரட்சிகப்பட்டு, தேவனுக்கு பிரியமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்று பிரயாசப்படுகிறோம். நம்முடைய குடும்பத்தில் எத்தனை பேர் இரட்சிக்கபடவில்லை, நம்முடைய நண்பாக்ள எத்தனை பேர் இரட்சிக்கபடவில்லை. இதற்காக நாம் கண்டிப்பாக ஜெபிக்க வேண்டும். தேவனுடைய வருகையிலே நம் உடன் பிறந்தவர்களோ, மனைவியோ, பிள்ளைகளோ, நண்பர்களோ, காணப்படாமற் போனால், எவ்வளவு வேதனைக்குறிய விஷயம், இதைதான் அப்.பவுல் வாஞ்சிக்கிறார். நான் கண்ட கிறிஸ்துவை இஸ்ரவேல் ஜனங்களும் அறிய வேண்டும் என்பதே அவருடைய இருதயத்தின் வேண்டுதலாய் இருந்தது. அதனால் அவருடைய வேண்டுதலை கேட்டு அநேகம் பேருக்கு கிறிஸ்துவை காண்பித்து சபைகளை உறுவாக்கினார்.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.(1 தீமத் 2:4)

இதே போல நாமும் காத்தரிடத்தில் மனமகிழச்சியாய் இருக்கும் போது இருதயத்தின் வேண்டுதல்களை நிறைவேற்றுவார். கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசிர்வதிப்பாராக

கிறித்துவுக்குள் அன்பு சகோதரன்

அற்புதராஜ்

## அனுபவ சாஸ்திரம்

### உறவுகளால் உறுதிபடுங்கள்

மனித வாழ்க்கை ஒரு கூட்டு வாழ்க்கை , ஆகவேதான் கர்த்தர் மனிதனை உண்டு பண்ணும் போதே குடும்பமாக உண்டாக்கினார். மனிதனுக்குள் ஒரு 'கூட்ட உணர்வு'' எப்போதும் இருப்பது நம் எல்லோருக்கும் விளங்கும். மிருகங்கள் பறவைகள் தனித்து உயிர் வாழ்ந்துவிடும். ஆனால் மனிதன் தனியாக உயிர் வாழ முடியாது. அப்படி வாழ்ந்தால் அவன் மனிநிலை பாதிக்கப்பட்ட 'மனித மிருகமாய்த்''தான் இருப்பான்.

ஒருவன் தனியாக சாதனை படைக்கலாம். ஆனால் அந்த சாதனையை பாராட்ட நண்பர்கள், உறவினர் எனப் பலர் வேண்டுமே. அந்த பலரையும் பெற்றிராத ஒருவன் என்ன பட்டம் பெற்றாலும், சாதனை செய்தாலும் அவனுக்குள் ஒரு வெறுமையே காணப்படும். அத்தகையவர்களுக்கு மற்றவர்களோடு ஒரு விரிசல் ஏற்பட்டிருக்கும். விரிசல் ஏற்பட்டால் அதை சீர் செய்யும் பொறுமையும் சகிப்புத்தன்மையும், விடாமுயற்ச்சியும் வேண்டும். முட்டிக்கொள்வதும் மோதிக்கொள்வதும், கடித்து குதறுவது போன்ற குணமும் கோப வேஷங்களும் மிருகங்களுக்கே தகும். மன்னிப்பதும் மறப்பதும், அன்பு காட்டுவதும் அரவனைப்பதுதான் மனித இயல்பு! அதற்கான வழிமுறைகள் அநேகம் இருக்கின்றன. அவைகளை அறிந்து கொள்ளும் மனோ வாஞ்சையும், அதன்படி செய்யும் மன விருப்பமும். அதற்காக தன் சுயத்தை விட்டு விட ஆயுத்தமும், தன் பெருமையான நிலையில் இருந்து கீழிறங்கும் சுபாவமும் இருந்தால் நாம் மக்களால் மதிப்பும் பெறும்(பெரும்) தலைவர்களாகி விடலாம். இதனை ஊழியர்கள் 'உள்ள பூர்வமாக சிந்தித்தால் உலகம் போற்றும் உயர் நிலையை அடையலாம்.

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்களை யாராவது வணங்கினால். அவர்களைவிட தாழ்வாக குனிந்து அவர் வணங்குவாராம்.ஏனென்று கேட்டால், பணிந்த போவதில் உள்ள மகிழச்சி வேறெதிலும், இல்லை என்பாராம், எனக்கு தெரிந்து ஒரு இளைய வயது போதகர், அவரை பார்த்து யார் "பிரைஸ் தி லார்ட்" என்று சொன்னாலும் தலையை மட்டும் ஆட்டுவார். வெகுசீக்கிரம் தன் தகப்பனார் சம்பாதித்து வைத்த விட்டு போன ஆத்துமாக்களை இழந்து இப்பொழுது இருக்கிற இடமே தெரியாமல் இருக்கிறார் . ஆக ஈகோ என்பதை அண்டவிடாமல் பார்த்து கொள்வதால் மற்றவர்களோடு வைத்து கொள்ளும் உறவுகளை பேண பெரிதும் உதவியாய் இருக்கும். "கனம் பண்ணுவதில் ஒருவரை ஒருவர் முந்தி கொள்ளுங்கள்'' என்று பவுல் தெரியாமலா சொன்னார்.?

. . . .தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் – – –(யாக்கோபு 4:6)

# விட்டுக் கொடுங்கள்

விட்டு கொடுப்பவர்கள் கெட்டு போவதில்லை, கெட்டு போகிறவர்கள் விட்டு கொடுப்பதில்லை என்று கேள்விபட்டிருப்பீர்கள். அதன் பொருளை உணர்ந்திருக்கிறீர்களா? ஒருவர் ஒரு வயல் வரப்பில் நடந்து போனார்,எதிரில் மற்றொருவர் வந்தார், அவர் இவருக்கு வேண்டாதவர், இவரது மனதில் அவருக்கு இடம் தரத்தேவையில்லை என்றும் அவர் வேண்டுமானால் கீழே இறங்கி போகட்டும் என்றும், அவருக்கு நான் குறைந்தவன் அல்ல என்றும் ஒரு இறுமாப்பு இவரது மனதில் இருந்தது. உள்ளத்தின் நிறைவால் வாய் பேசுமல்லவா? எந்த முட்டாளுக்கும் நான் வழியை விட்டு கொடுப்பதில்லை என்றார். நான் விட்டு கொடுப்பதுண்டு என்று கூறி எதிரே வந்தவர் இறங்கி வழிவிட்டு நடந்தார். விட்டு கொடுக்காதவர், தன் வாயாலேயே தனக்கு முட்டாள் பட்டத்தை வாங்கிகட்டி கொண்டார் என்பதுதான் மிச்சம்.

விட்டு கொடுப்பதின் ஆழம் என்னவென்றால், அதனால் நாம் இழப்பதை பெற்று கொள்கிறோம். அதற்கு காரணமானவர்களையும் ஆதாயபடுத்தி கொள்கிறோம், (Double Gain) விட்டு கொடாதவர்களோ தங்களை தாங்களே வருத்தி கொண்டு வாழ்க்கை முழுவதும் போராடி கொண்டிருப்பார்கள், வளர்ச்சி இராது. ஊழியம் போராட்டமாய் இருக்கும் உயர்வும் தற்காலியமாகத்தான் இருக்கும் , அறியாமையில் விடாபிடியாய் இருப்பார்கள்: தாங்கள் சொல்வதுதான் சரி, தாங்கள் செய்ததுதான் சரி என்று கூறிக் கொண்டே வீண்வாதம் பண்ணி கொண்டிருப்பார்கள். (இவர்களுக்கு சத்தியம் விளங்காது)

குரங்கு பிடிப்பவர்கள் , குரங்கின் குணத்தை வைத்தே ஒரு தந்திரம் செய்திருப்பார்கள், ஒரு களயத்திற்குள் சிறிதாக ஓட்டை போட்டு கடலையை உள்ளே வைத்து விடுவார்கள். குரங்கு கடலைக்கு ஆசைபட்டு கலயத்திற்குள் கையை விட்டு, கை நிறைய கடலையை அள்ளும். கை விரல்களை மூடி இருப்பதால் கடலையோடு கையை வெளியே எடுக்க முடியாதபடி துவாரம் சிறிதாகவிட கடலையை விட்டால் கையை வெளியே எடுக்கலாம், ஆனால் குரங்கு கடலை மீதுள்ள பாசத்தால் கடலையையும் விடாது கையையும் வெளியே எடுக்க முடியாது . போராடி கொண்டிருக்கும் குரங்கின் தலையில் அடித்து எளிதாக குரங்கை பிடித்து விடுவார்கள். சாத்தானின் தந்திரங்களும் இப்படிதான். விசுவாசிகளையும் ஊழியக்காரர்களையும் கட்டிபோட்டு விடுகிறது. போராட்டமுள்ள ஊழியர்களாக வாழ்நாளெல்லாம் தவித்து கொண்டு இருக்கிறார்கள். விட்டுக்கொடுக்கும் மனதுடையவர்களோ புத்திசாலிகள்! சாத்தானின் தந்திரங்களை நாம் அறியாதவர்கள் அல்லவே! எதை விட்டு கொடுக்க வேண்டமோ அதை விட்டு கொடுத்தால் நமது வாழ்க்கையில் வரும் போராட்டங்களில் ஜெயத்தை நாம் காண முடியும்.

# நயம்பட பேசுங்கள்

தமது பேச்சில் கவனம் எப்போதும் இருக்க வேண்டும்.பிறர் மனம் புண்படாமல் பேச பழக வேண்டும், நா வன்மை வேண்டும் என்பதன் பொருள் சிலருக்கு வன்மையான நாவு இருக்க வேண்டும் என்ற தவறான பொருள் கொள்ள செய்து விட்டது. எப்படி சிலருக்கு நாநயம் நாணயம் ஆகிவிட்டதோ அப்படி. ! ஒரு முறை ஓர் புலவரிடம் மன்னன் ஒருவன் உன் மகள் திருமணத்திற்கு நான் 100 ரூபாய் தருகிறேன், கல்யாணத்தை சிறப்பாக நடத்திகொள்ளும் திருமணத்திற்கு ஒரு வாரம் இருக்க வாரும் என்று சொல்லி அனுப்பினான்.

புலவரும் திருமண ஏற்பாடுகள் செய்து கொண்டு 1 வாரம் இருக்க மன்னரிடம் போனார். மன்னா தாங்கள் வாக்கு பண்ணினபடியே வந்துவிட்டேன். எனது மகள் திருமணத்திற்கு இன்னும் 1 வராம்தான் இருக்கிறது. தாங்கள் நானூறு ரூபாய் தருகிறேன் திருமணத்தை நடத்தி கொள் என்று சொன்னீகளே .... என்றார். மன்னருக்கு கோபம் வந்து விட்டது. நான் எப்போது 400 ரூபாய் கொடுக்கிறேன் என்று சொன்னேன் என்று புலவரை கேட்டார். நா(ன்) நூறு தருகிறேன் என்று நான் சொன்னதால்தான் கேட்டேன் மன்னர் மறந்துவிட்டீர்களோ என்னவோ நான் இதற்கு முன் வந்து கேட்ட போது 300 தருகிறேன் என்றீரே அதாவது நினைவிருக்கறதா என்றார் புலவர். மன்னருக்கு கோபம் தாங்க முடியல கோபம் தனியாமல்.. என்ன உளருகிறீ என்று புலவரை கடிந்து கொண்டார்.

புலவர் மீண்டும் இருநூறு தருகிறேன் என்று சொன்னீகளே அதுவும் மறந்து போனதா? என்றும் அதுவும் பொய்யா? என்று மன்னரை பார்த்து, மன்னருக்கு கடும் கோபம் வந்து விட்டது. நான் எப்போது இருநூறு தருகிறேன் என்றேன் என்னை பார்த்தா ஏமாற்ற பார்க்கீறீரா? புலவரே என்று நான் பொய் சொல்லி ஏமாற்ற நான் ஒன்றும் ஏமாந்த சோனகிரி அல்ல என்றார். மன்னர் கோபித்து கொள்ள வேண்டாம். எல்லாமே தாங்கள் சொன்ன வார்த்தைதான். நான் நூறு" தருகிறேன் என்றதும்தாங்கள்தான். நான் கேட்ட போது "இரு நூறு" தருகிறேன் என்றதும் தாங்கதான். நான் பொய் சொல்ல வில்லையே .. என்றார். மன்னருக்கு புலவரின் நாநயம் விளங்கிற்று, ஆகவே புலவரே உமது நாநயத்தை பாராட்டுகிறேன். உங்கள் தமிழ் நாநயத்தை பாராட்டுகிறேன். மொத்தமாக நானூறு கொடுத்து உம்மை வாழ்த்துகிறேன். உமது மகள் திருமணம் சிறப்பாக நடக்கட்டும் என்றார் . இப்படி நாநயம்பட பேசி நட்ப்பை வளர்த்து கொள்கிறவர்களும் உண்டு. நன் மதிப்பை பொறுகிறவர்களும் உண்டு.

# 2015 – ஜுலை மாத விடைகள்

1. மோசே – அப்போஸ்தலர் 7: 20

2. கொர்நேலியு – அப்போஸ்தலர் 7: 20

3. 120 சீஷர்கள் – அப்போஸ்தலர் 1: 12-15

4. அப்போஸ்தலர் 7: 20

5. அப்பொல்லோ – அப்போஸ்தலர் 18: 24

6. மூப்பர்களை – அப்போஸ்தலர் 14: 23

7. ஸ்தேவான் – அப்போஸ்தலர் 6: 15

8. பிலிப்பு – அப்போஸ்தலர் 8: 40

9. பவுல் – பர்னபா – அப்போஸ்தலர் 15: 35

10. தீமோத்தேயு – அப்போஸ்தலர் 16 : 1

11. லீதியாள் – அப்போஸ்தலர் 16: 14

12. அனனியா – அப்போஸ்தலர் 23 : 2

13. கிறிஸ்பு – அப்போஸ்தலர் 18 : 8

14. சொஸ்தனே – அப்போஸ்தலர் 18 : 17

15. சவுல் (பவுல்) – அப்போஸ்தலர் 22: 19-20

## 2015 ஜுலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. டஃப்னி ஜெபசிங்
Sis. செலின் டேவிட்ஜெயகுமார்
Sis. லீம்சியா
Sis. ஜெப ராணி
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்

Bro. ஜான்ஸன்
Bro. கிறிஸ்டோபர். M
Bro. ஜாண்
Bro. ஆல்பர்ட்

## "சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்."

பிலிப்பியர் - 4:9

### இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. வனிதா புருஷோத்தமன்
செல்வி. காயத்ரி கொம்மையன்
செல்வி. புஷ்பா ராஜன்
செல்வி. சிஃபன்சிஹா சாம்ஆனந்த்

செல்வன். ஜாப் ஆபிரகாம் வில்கின்ஸ்
செல்வன். எரிக் நாதான் ஆன்டனி
செல்வன். ரோஷன் ஸ்டீபன்
செல்வன். பெனோ ஜெரின்

சகோதரி. மிலி ஜஸ்டஸ்
சகோதரி. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
சகோதரி. ஜரின் ,ஃபிரீடா டென்சிங்
சகோதரி. வெற்றி செல்வி புருஷோத்தமன்
சகோதரி. எமிமா சாமுவேல்
சகோதரி. ஸ்நேக லதா கிறிஸ்டோபர்

சகோதரி. சவ்மியா சுனில் வின்ஸ்
சகோதரி. ஹெலன் ஷீலா
சகோதரி. டெய்சி ளூனா ஆன்டனி

சகோ. ஜெப துரை
சகோ. ஜெயச்சந்திரன்
சகோ. வில்சன் செல்லையன்
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோ. சதீஷ்குமார்
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
சகோ. ஐசக் சற்குணராஜ்
சகோ. ஜெரின்
சகோ. அற்புதராஜ்

### இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி /திரு. ஜெயக்குமார் ஞானதாஸ்
திருமதி / திரு. ஸ்டீபன் ஜெயக்குமார்
திருமதி / திரு. இம்மானுவேல் ஸ்டீபன்
திருமதி / திரு. ஜோசப் பீட்டர்
திருமதி / திரு. ஜெரின்
திருமதி / திரு. பால்ராஜ் ஆமோஸ்
திருமதி / திரு. சிவகுமார்
திருமதி / திரு. விஜய் இம்மானுவேல்
திருமதி / திரு. ஆரோக்கியராஜ்
திருமதி / திரு. பால் புருஷோத்தமன்

# 2015 ஆகஸ்டு மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/08/2015 | சகோ.ஆராக்கியதாஸ் | சகோ. ரவிஜான் பீட்டர் |
| 09/08/2015 | சகோ. ஸ்டாலின் | சகோ. சுகுமார் |
| 16/08/2015 | சகோ.டேவிட் குமார் | சகோ. ஐசக்துரை |
| 23/08/2015 | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. அசோக்குமார் |
| 30/08/2015 | சகோ.அற்புதராஜ் | சகோ. ஸ்டாலின் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/08/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ. கிறிஸ்டோபர் |
| 14/08/2015 | சகோ. டேவிட் குமார் | சகோ. ஆசீர்வாதம் |
| 21/08/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/08/2015 | குடும்ப ஆராதனை<br>சகோ. ஐசக் துரை | குடும்ப ஆராதனை<br>சகோ. ரவிச்சந்திரன் |

13/08/2015 முழு இரவு ஜெபம் இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி )

(28/08/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு
இடம் : புதிய ஜெப வீடு (பாஹுல்)

00/08/2015 - சகோதரிகள் ஐக்கிய கூடுகை
நாள் – இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

# 2015 ஆகஸ்டு மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. பாவமுள்ள ஜாதியை பற்றி கூறின தீர்க்கதரிசி யார்?

2. நீதியுள்ள ஜாதியை பற்றி எழுதினவர் யார்?

3. 'வலையிலே சிக்குண்ட கலை மானை பற்றி" வாசிப்பதெங்கே ?

4. குலைக்க மாட்டாத ஊமையான நாய்கள் யார் ?

5. 'எனக்கு ஆறுதல் சொல்ல வராதேயுங்கள்" என்றது யார் ?

6. கொந்தலைக்கும் கடல் அலைகள் யார் ?

7. வஸ்த்ரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடந்த தீர்க்கதரிசி யார்??

8. யாருடைய நெற்றி வெண்கலமாயிருந்தது ?

9. கர்த்தர் நீதி செய்கிற தேவன் என்றது யார் ?

10. எந்த பட்டினத்தின் பிரபுக்கள் மூடர்கள்?

11. எனக்கு பிரியமானதெல்லாம் நிறைவேற்றுவேன் – யார்?

12. சேனைகளின் கர்த்தருடைய திராட்சை தோட்டம் எது ?

13. மாயையின் கயிறுகளால் அக்கிரமத்தை இழுத்துக் கொண்டு வந்தவர்கள் யார் ?

14. 'ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள்" என்ற தீர்க்கதரிசி யார் ?

15. பர்வதங்களை தராசால் நிறுத்தவர் யார் ?என்று வாசிப்பதெங்கே?

விடைகளை வருகின்ற 21-08-2015 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்தி மலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் . விடைகளை "ஏசாயா" தீர்க்கதரிசியின் புத்தகத்தில் தேடி கண்டு பிடிக்கவும்

## – – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு 7:7

# வாலிபர் பகுதி

## வாலிபரே உங்களுக்கு எழுதுகிறேன்

பிதாக்களே ஆதிமுதலிருக்கிறவை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிறைந்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்திருக்கிறதினாலும்' உங்களுக்கு எழுதியிருக்கிறேன் (I யோவான் 2:14)

வாலிபம் என்பது வளர்ச்சி பருவம். வாழ்க்கை பாதையில் திருப்பு முனையை சந்திக்கும் இருவழிசந்தி: நன்மை தீமையை சிந்தித்து பார்த்து தீர்மானமெடுக்கும் தேர்வு காலம், தன் எதிர்காலத்தை நிர்ணயித்து கொள்ளும் தகுதி வந்த பருவம், தன்உடல், தன் பொருள் ஜீவன் அனைத்தையும், தான் தேர்ந்தெடுத்த தீர்மனத்திற்கு முதலீடு செய்ய முன்வரும் பருவம் , பொருப்பை ஏற்க துணிவு கொள்ளும் அருமையான பருவம், இந்த பருவத்தை குறித்து புலம்பல் தீர்க்கதரிசி எழுதும் போது, தம் இளம் பிராயத்தில் நுகத்தை சுமப்பது மனுஷனுக்கு நல்லது, (புலம்பல் 3:27) என்கிறார்.

ஆம் வீட்டுக்கும் நாட்டுக்கும் இளைஞர்கள் தேவை! வாலிபர்கள் அவசியம், வாலிபர்களைதான் சமுதாயம் தேடுகிறது, வாலிபர்களைதான் அரசியல்வாதிகளும் தேடுகிறார்கள், வாலிபர்களைதான் ஆண்டவரும் தேடுகிறார், அந்த வாலிபனைதான் சாத்தானும் பிடித்து கொள்ள பிரயாசபடுகிறான். ஆகவே வாலிபம் யாவரையும் கவர்ச்சிக்கும் கனநிலைபருவம், தனக்கும் தன் தேசத்திற்கும், தன் தேவனுக்கும் பயன்பட கூடிய பாத்திரமாவதை தெரிந்தெடுக்கும், தேர்தல் கால பருவம், இதை வாசிக்கும் அருமையான வாலிப தம்பிகளே தங்கைகளே! மற்றும் பெற்றோர்களே, நீங்கள் எப்படிபட்ட வாலிபராக, உங்கள் பிள்ளைகள் எப்படிபட்ட பிள்ளைகளாக, விரும்பகிறீர்களோ அப்படியே உங்களை வழிநடத்துவாராக ,

இந்த செய்தி உங்களை ஒரு உருவாக்கும் சக்தியுள்ள பாத்திரமாக்க உதவி செய்வதாக ! யோவான் காலத்திலிருந்த வாலிபர்கள் I. பலவான்களாய் இருந்தார்கள், II. தேவ வசனம் அவர்களில் நிலைந்திருந்தது, III, அவர்கள் பொல்லாங்கனை ஜெயித்தவர்களாயிருந்தார்கள், ஆகையால் அவர்களுக்குள், பக்தி வைராக்கியத்தை மூட்டி எழுப்பும்படியும் உலகத்தின் மேல் அன்பு கூறாமல் சுய சித்தம் செய்யாமல், தேவ சித்தம் செய்யும் வாலிபர்களுக்கு நிரூபம் எழுதுகிறார். இந்த செய்தியில் வேதத்தில் உள்ள சில வாலிபர்களை உங்களுக்கு அறிவித்து அவர்களின் நற்கிரியைகளை தியானிப்பதின் மூலம், உங்களுக்குள்ளும் பக்திவினையத்தை உண்டு பண்ணும்படி இச்செய்தியை பகிர்ந்து கொள்கிறேன் கருத்தோடு வாசியுங்கள்.

வாலிபரே நீங்கள் பலவான்களாய் இருப்பதனால் உங்களுக்கு எழுதுகிறேன் ( I யோவா 2:14) என்கிறார் அப். யோவான். அக்காலத்தில் இருந்த வாலிபர்கள் பலவான்களாய் இருந்தார்கள் என்றால், உடல் ரீதியாக அவர்கள் பலவான்களாய் இருந்திருப்பார்கள் என்று நாம் எண்ணக்கூடாது, அப் 1:8ன்படி பரிசுத்த ஆவிஉங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதாவிலும் சமாரியாவிலும், உலகத்தின் முடிவு பரியந்தமும் எனக்கு சாட்சியாய் இருபீர்கள் என்று இயேசு சொன்னபடி, அவருக்கு சாட்சியாயிருக்கும்படி பரிசுத்த ஆவியின் பெலன் உடையவர்களாய் இருந்தார்கள் என்பதே இதன் பொருள். கறியும் மீனும் முட்டையும் சாப்பிடுவோர் உடலை பெலமுள்ளவர்களாக மாற்றி கொள்கிறார்கள். ஜெபம், வேத வாசிப்பு, தியானம் , இரட்சிப்பு, பரிசுத்தாவியின் அபிஷேகம், ஆராதனை இவைகளில் நிறைந்திருக்கிறவர்கள் ஆவிக்குரிய பெலவான்களாய் இருக்கிறார்கள், அன்றைய வாலிபர் அப்படி இருந்தபடியால்தான் பொல்லாங்களை (சாத்தானை) ஜெயித்தவர்களாயிருந்தார்கள்.

என்று அவர்களுக்கு நிரூபம் எழுதுகிறார். உடல் ரீதியான பெலவான்கள் பயில்வான்களை வென்று பாராட்டு பெறுகிறார்கள், ஆவிக்குரிய பெலவான்கள் சாத்தானை ஜெயித்தவர்களாய் இயேசுவுக்கு சாட்சிகளாய் இருக்கும்படி கர்த்தர் விரும்புகிறார். உங்களுக்கு இந்த விருப்பமுண்டா? நீங்கள் ஆசிர்வதிக்கபட்டவர்கள்.!

1. ஆராதனை செய்த வாலிபன்

அப் 20:7: 12 வரை வாசித்தால் ஐத்திகு என்னும் பெயர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்து பவுலின் பிரசங்கத்தை கேட்டு கொண்டிருந்தான், அவன் நித்திரையடைந்து மூன்றாம் மெத்தையில் இருந்து கிழே விழுந்து மரித்தவனாய் எடுககப்பட்டான். பவுல் ஜெபித்து . . . . அந்த வாலிபன் உயிர்பெற்றான்

இந்த சம்பவம் நீங்கள் அறிந்ததே, ஐத்திகு என்ற அந்த வாலிபன் பக்தியுள்ளவான்தான், அதனால்தான் ஆராதனைக்கு வந்திருந்து பவுலின் பிரசங்கத்தை கேட்டு கொண்டிருந்தான், ஆனால் அவன் தெரிந்தெடுத்தது உட்கார்ந்திருந்த இடம் ஜன்னல், ஜன்னலில் உட்டகர்ந்திருப்பவனின் பார்வை உள்ளே ஒரு கண்ணும் வெளியே ஒரு கண்ணும் உடையவனாக இருப்பான். அதாவது உலக சிந்தையும் உண்டு,ஆவிக்குரிய சிந்தையும் உண்டு , இப்படிபட்ட வாலிபர்கள்தான் கிறிஸ்தவ சமூகத்தில் அதிகம் உண்டு .

ஒரு போதகர் சொல்லி கேட்டது, அவர் ஒரு வாலிபனை சுவிஷேக கூட்டத்தில் பார்த்தாராம் அவனை பார்த்து மிகவும் ஆச்சர்யபட்டு அவன் பெயர் என்ன என்று கேட்டாராம் அந்த வாலிபனின் பெயர் ஜார்ஜ் உதய சூரியன் என்று சொன்னார் , அவர் இக்கால நடிகர் ஒருவரை போல தலை முடியும், அவரை போல சில சேஷ்டைகளை செய்பவராக இருந்தாராம் இருந்தும் கழுத்தில் ஒரு சிலுவை , டைட் பேண்ட, லூசான சட்டை, கையில் ஓர் சினிமா பத்திரிக்கை, என்று அந்த ஜார்ஜ் உதய சூரியன் இருக்க கண்டார் . எனக்கு அருமையான வாலிப தங்கையே, தம்பியே , நாம் எப்படி ஜார்ஜை போல உலகத்தும் ஆண்டவருக்கும் ஊழியம் செய்கிறவர்களாக இருக்கிறோமா?!. ஜாக்கிரதை இரண்டிலும் முன்னேற்றம் இருக்காது. அந்த வாலிபனுக்கும் இதே நிலைதான்.

இந்த ஐத்திகு மூன்றாம் மெத்தையில் இருப்பதும், ஜன்னலில் உட்கார்ந்து இருப்பதும் மறந்து–அதாவது ஜாக்கிரதையாய் இல்லாமல் இருந்து தூங்கி கிழே விழுந்து விட்டான். மரித்து போனான், மூன்றாம் மெத்தை என்பது ஆவி ஆத்துமா, சரீரமாகிய நமது சரீர அமைப்பில் ஆண்டவர் நம்மோடு உறவாடும் உயர்ந்த மெத்தைதான் ஆவி. ஒருவன் ஆவிக்குரியவனாய் இருந்தால் அனுபவத்தில் இருக்கிறான் என்று அர்த்தம். அப்படி இருப்பவன் அதிக ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்க வேண்டும். உயரம் கூட கூட ஆபத்தும் அதிகமாகும் . ஆகவே ஜாக்கிரதை நமக்கு அதிகம் வேண்டும். பவுலுடைய பிரசங்கத்தை கேட்டு உணர்வடையாத இந்த வாலிபன் தன் அஜாக்கிரதையால் விழுந்து விட்டான் . விழுந்துவிட்டது ஆச்சர்யமல்ல! அவன் ஆராதனையின் ஆசீர்வாதத்தை கெடுத்து, அனைவரையும் கலங்கபண்ணிவிட்டான். ஒருவனுடைய ஆவிக்குரிய அஜாக்கிரதை அனைத்து சபையினரையும் பாதிக்கிரதை உணரமுடிகிறதா! தங்கையே தம்பியே! நீங்கள் இப்படிபட்டவர்களாக சபையின் வளர்ச்சிக்கோ, அல்லது ஆராதனைக்கோ, சபையில் குழுப்பம் உண்டாவதற்கு காரண கர்த்தாவாக இருந்திருக்கிறோமா?

நல்ல வேலை பிரசங்கம் பண்ணியவர் பவுல் அவர் உடனே வந்து அவனுக்காக ஜெபம் பண்ணி உயிர் பிழைக்க பண்ணினார். ஆம் அவன் அதிஷ்டவசமாய் உயிர் பிழைத்தான். அவன் பெயருக்கே அதிஷ்டம் என்றுதான் பொருள். இன்றைக்கும் அநேக ஐத்திகுகள் சபைகளில் உண்டு. அவர்கள் மூன்றாம் மெத்தையில் இருந்து விழுந்திருந்தாலும் உயிரே போயிருந்தாலும் ஒன்றும் தெரியாத, ஒன்றும் நடக்காதது போல தங்களை உயிர் உள்ளவர்களாக காட்டி கொள்கிறார்கள். ஜாக்கிரதை அன்று பவுல் இருந்தார் ஜெபித்து உயிர் அடைய செய்தார் ,ஆனால் இன்று ? (தொடரும்)

# அலெக்ஸாண்டர் மெக்கே
# (1849 – 1890)

ஸ்காட்லாந்து தேசத்தில் ரைனே என்ற இடத்தில் 1849–ம் வருடம் அக்டோபர் 13–ம் தேதி பிறந்தார். சிறுவயதிலேயே தனது இருதயத்தை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்ததுடன், நேர்மையாக வாழவும், கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்யவும், துடிப்புடன் இருந்தார். இவரது வாழ்வைக் கவனித்த பெற்றோரும் தங்களது மகன், ஒரு போதகராகவோ மிஷனெரியாகவோ மாறுவான் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். சபைப் போதகரான தனது தந்தையின் வேத போதனைகளும், தனது தாய் சொல்லும் வில்லியம் கேரி, ஹென்றி மார்ட்டின், டேவிட் லிவிங்ஸ்டன் போன்றோரின் மிஷனெரி சரிதைகளையும் விரும்பிக் கேட்பார். தொழில் நுட்பத்தில் அதிக ஆர்வமுடைய அலெக்ஸாண்டர், தனது தகப்பனாரின் ஆலயக் கட்டுமானப் பணியின்போது, அங்குள்ள தொழிலாளர்களுடன் சேர்ந்து பணி புரிந்தார். அடிக்கடி நான்கு மைல் தூரம் நடந்து ரயில் நிலையம் சென்று அங்கு வந்து நிற்கும் ரயிலையும், இன்ஜின் டிரைவர் எப்படி இயக்குகிறார் என்பதையும் கூர்ந்து கவனித்து விட்டு திரும்பி நான்கு மைல் நடந்தே வீட்டுக்கு வருவார். பதிமூன்று வயதான அலெக்ஸாண்டர் கப்பல் கட்டும் தொழில்நுட்ப கல்வியைக் கற்றார். ஜெர்மனிக்கு மேற்படிப்பிற்காகச் சென்றார். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற மிஷனெரியின் வாழ்க்கைச் சரிதையைப் படித்துவிட்டு தனது டைரியில் லிவிங்ஸ்டன் இறந்துவிட்டார். ஆப்பிரிக்கா தேசத்தில் தேவனையும், தனது அயலானையும் நேசித்த ஸ்காட்லாந்து கிறிஸ்தவன் நீயும் போய் அப்படியே செய் என்று எழுதினார் அலெக்ஸ்.

பலவித கேள்விகளுடன் அலெக்ஸ் 1875 ஆம் ஆண்டு டிசம்பர் 12–ம் தேதியில் டெய்லி ரெவியூ என்ற பத்திரிக்கையைப் படிக்க நேர்ந்தது. அதில் டேவிட் லிவிங்ஸ்டனைத் தேடிப்போன ஹென்றி எம்.ஸ்டேன்லி எழுதின கடிதம் அச்சாகியிருந்தது. உகாண்டாவின் ராஜா வெள்ளை மனிதர்களின் கடவுளை அறிய வாஞ்சை காட்டுகிறார். உகாண்டா மக்களின் நோய்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வீடுகளைக் கட்டவும், எந்த வேலை செய்யவும் ஆயத்தமாக உள்ள மனிதர் கிடைப்பாரேயானால் அவர் ஆப்பிரிக்கா தேசத்தை மீட்பவராவார் என்று எழுதியிருந்தார். இதனைப் படித்த அலெக்ஸாண்டருக்கு இது தெய்வீக அழைப்பாகவே இருந்தது. 1876–ம் ஆண்டு ஏப்ரல் 27–ம் தேதி 7 வாலிப மிஷனெரிகளுடன் ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள உகாண்டாவிற்கு கப்பல் ஏறினார் அலெக்ஸ். உகாண்டா மக்கள் தீய ஆவிக்கு பயந்து எப்போதும் தாயத்துக்களை அணிந்துகொண்டும், வீட்டின் கதவுகளில் தொங்கவிட்டும் இருப்பார்கள். மந்திரம், சூன்யம் போன்றவற்றை எதிர்த்து பிரசங்கித்ததுடன் செயல்முறை விளக்கமாக, ஒரு தாயத்தை விலை கொடுத்து வாங்கி மக்கள் முன்பாக அதை எரித்து காண்பித்தார். மிஷனெரிக்கு என்ன சம்பவிக்கும்? என்று மக்கள் ஆச்சரியத்துடன் கவனித்தனர். ஒன்றும் நடக்காததை கவனித்த மக்கள் அலெக்ஸை நம்ப ஆரம்பித்தனர். ராஜாவின் தாய் மரித்தபோது சவப்பெட்டி செய்ய அலெக்ஸாண்டரிடம் கேட்டனர். ராஜா விரும்பியபடி அதை திறம்பட வடிவமைத்ததால் ராஜா அவரைப் பாராட்டினார். அதைப் பயன்படுத்தி ராஜாவிடம் மரணத்திற்கு பின் ஒரு நித்திய வாழ்வு உண்டு என்பதைத் தைரியமாகப் பகிர்ந்து கொண்டார். ராஜாவுடன் ஒரு நல்ல உறவையும் சம்பாதித்தார்.

உகாண்டா மக்களுக்கு அங்குள்ள மாசுபட்ட தண்ணீரால் நோய்க்கிருமிகள் தாக்கி பல்வேறு நோய்களால் அவதிப்படுவதைப் பார்த்து கிணறு வெட்ட ஆரம்பித்தார். தன்னுடன் எடுத்து வந்த இயந்திரம் மூலம் எழுத்து உருவங்களைப் பெரியதாக அச்சிட்டு மக்களுக்கு எழுதப் படிக்க சொல்லிக் கொடுத்தார். தனது மீதியான நேரத்தை புதிய ஏற்பாட்டு பகுதிகளை அவர்களது மொழியில் மொழி பெயர்ப்பும் செய்தார். கிணறு வெட்டுவது,

தொழிற்கூடம் அமைப்பது, பள்ளிக்கூடம் நடத்துவது, பாதை அமைப்பது என்ற பல பணிகளை அலெக்ஸாண்டர் செய்த போதும் தனது இலக்கான ஆத்தும ஆதாயப் பணியை மறக்கவில்லை. ஆத்துமாக்களுக்கு பற்றி எரியும் வைராக்கியத்தை எனக்குத் தாரும். அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கும், இரட்சிக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே ஒரு இணைப்பாக இங்கு நான் நின்று கொண்டிருக்கிறேன் என ஜெபிப்பார். எந்த வழி முறைகளிலாவது, சுவிசேஷம் இந்த இருண்ட கண்டத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைய பாதையைச் செவ்வைபண்ணுவேன் என்பார். இவரது அர்ப்பணிப்பை ஆண்டவர் கனம் பண்ணி, செம்பெரா என்பவரை முதல் விசுவாசியாகத் தந்தார். இவரது ஞானஸ்நானத்திற்குப் பிறகு, ராஜாவின் மூன்று ஆட்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அநேக ஆத்துமாக்கள் மந்தையில் சேர ஆரம்பித்தனர். ராஜாவும் சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருந்தார். ஆனால் பலதாரமணம், சூன்யம் செய்தல், அடிமைத் தொழில், மற்ற ஆதிவாசிகளைக் கொள்ளையிடுதல் விக்கிரக ஆராதனை போன்றவற்றை முழுமையாகக் கைவிட்டாலொழியதான் ஞானஸ்நானம் கொடுக்க இயலாது என்று அலெக்ஸாண்டர் சொன்னபோது அதை ராஜா ஏற்க மறுத்தார். ராஜாவின் சுகவீனத்தின்போது மந்திரவாதிகளின் வார்த்தையின்படி இரண்டு ஆயிரம் ஏழை விவசாயிகள் கொல்லப்பட்டனர். தன்னுடைய உயிரையும் பணயம் வைத்து அலெக்ஸாண்டர் ராஜாவுக்குக் கடிதம் எழுதி இப்படி உயிர்களைக் கொல்வதை விட்டுவிடக் கெஞ்சினார். சிறிது நாட்களில் ராஜா மேடேசா இறந்து போனார். அவருக்குப் பின் வந்த ராஜா மேவான்கா, அதிகக் கொடூரமானவன். கிறிஸ்துவைப் பின்பற்றி வந்த மக்களைக் கொடூரமாகக் கொலைசெய்ய ஆரம்பித்தான். மூன்று கிறிஸ்தவ வாலிபர்களின் கரங்களை வெட்டித் தீயிலிட்டுக் கொலை செய்தான். 200 கிறிஸ்தவர்களைப் பிடித்து கைகளை வெட்டி, மிதமான தீயில் வறுத்து சுட்டு எரித்தான். மீதியாய் இருந்தவர்கள் சிதறப்பட்டுப் போனார்கள். அதிகம் சோர்வுற்ற அலெக்ஸ் பவுலைப் போல் நாங்கள் எப்பக்கமும் நெருக்கப்பட்டு சோர்வடைவதில்லை என்ற வாக்குக் கேற்ப தன்னை தேவனுக்குள் திடப்படுத்திக்கொண்டு ஊழியத்தைத் தொடர்ந்தார்.

உகாண்டா தேசத்துக்கு மிஷனெரி தேவை என்று கடிதம் எழுதிய ஹென்றி ஸ்டான்லி அலெக்ஸாண்டர் பணிசெய்த இடத்திற்கே வந்து அவரை உற்சாகப்படுத்தினார். 1890–ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8–ம் தேதி, ஆப்பிரிக்கா தேசத்தில் கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு தனது 41–வது வயதில் உகாண்டாவிலேயே மரித்தார். 14 வருடம் ஆப்பிரிக்கா தேசத்திலே பணிபுரிந்த அலெக்ஸ் ஒரு முறை கூட தனது சொந்த நாடு திரும்பவில்லை. 41 வயதான இளம் பொறியாளர் உகாண்டா பகுதிக்காக தனது உயிரையே தந்ததால் என்ற கேள்விக்கு 1922–ம் வருடத்தில் பசில் மத்தேயூ என்பவர் இப்படியாக எழுதுகிறார். இன்று உகாண்டாவின் பிரதம மந்திரி அப்போலோ காக்குவா ஒரு கிறிஸ்தவர். இவர் சிறுபையனாக இருந்தபோது ராஜா மவாங்காவினால் அடித்து உபத்திரவப்பட்டவர். இன்று உகாண்டாவின் ராஜா கவடியும் ஒரு கிறிஸ்தவர். தலைநகரில் ஒரு அழகிய தேவாலயம் உண்டு. இங்கு 70000உகாண்டா கிறிஸ்தவர்களும் உண்டு என்றார். அடிமை வியாபாரம் முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. ராஜாவுக்காக விக்கிரகத்திற்காக மனிதர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய மாறுதலை அலெக்ஸாண்டர் தன் சொந்த கண்ணால் பார்க்கவில்லை என்றாலும் அவர் செலுத்தின விலைக்கிரயம் வீணாகவில்லை.

தொகுப்பு
கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்
சுகுமாரன்

# PRAISE THE LORD

## புத்தியுள்ள ஸ்திரிகள்

கர்த்தருக்கள் பிரியமான சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திலே உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன். மாத்திரமல்ல இச்செய்தியின் மூலமாக உங்களோடு பேசுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.' பெண்கள் வீட்டின் கண்கள்" என்கிற ஒரு பழமொழிஉண்டு அதையேதான் வேதம் இப்படியாக கூறுகிறது. 'புத்தியுள் ஸ்திரி தன்வீட்டை கட்டுகிறாள், புத்தியில்லாதவளோ தன் கைகளினால் அதை இடித்து போடுகிறாள். (நீதி 14:1)ஆம் பிரியமானவர்களே, நம் வீடு எப்பொழுதும் சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும், சகலவிதஆசிர்வாதங்களினாலும், கட்டப்படவேண்டு மென்றால், பெண்களாகிய நாம் கடைபிடிக்க வேண்டிய மூன்று முக்கியமான காரியங்களை குறித்து பார்ப்போம்.

1.அழியாத அலங்கரிக்கபட்டிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே, உங்களுக்கு அலங்காரமாயிருக்க கடவது, அதுவே தேவனுடைய பார்வையில் விலையேற பெற்றது. 1 பேதுரு 3:4

ஆம் சகோதரிகளே சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி நம் இருதயத்தை நிரப்ப வேண்டுமென்றால் நாம் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொண்டு அனுதினமும் நம் குடும்பத்திற்காக உபவாசத்தோடும், மன உருக்கத்தோடும், ஜெபிக்க வேண்டும், அப்பொழுது அவராலே பெற்ற அபிஷேகம் நம்மை சகலவற்றிலும் நடத்தும் ஒருவரும் உனக்கு போதிக்க வேண்டிய அவசியம்இல்லை என்று (1 யோவான் 2:7)ல் வாசிக்கிறோம். மாத்திரமல்லாமல் (யோவான் 16:13)ல் சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். மேலும் (லூக்கா 12:12)ல் நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்கு போதிப்பார். இந்த வசனத்தை சற்று தியானிப்போம் என்றால் பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாயிருக்கிறது. ஆகவே இந்த கடைசிகாலங்களில் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு ஜெபிக்க நம்மை ஒப்புக்கொடுப்போம். அப்பொழுது சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியானவர் நம்மை நடத்துவார்.

2. சண்டை பண்ணாதவர்களாக இருக்க வேண்டும்.

நீதிமொழி 17:1ல் சண்டையோடு கூடிய வீடு நிறைந்த கொழுமையான பதார்தங்களை பார்க்கிலும், அமரிக்கையோடு சாப்பிடும் வெறும் துணிக்கையே நலம். தேவ பிள்ளையே நாம் குடும்பத்தாரோடு சண்டை போடக்கூடாது. அதுவும் வேலையை முடித்து விட்டு களைப்போடு வீடு திரும்பும் கணவரிடம் ஒரு நாளும் சண்டை போடக்கூடாது. அவர்களின் வேலை முடிந்து வந்த உடனேஅவர்களுக்கு மனைவிமார்கள் செய்யவேண்டிய அன்பான உபசரிப்புகளை

செய்யவேண்டும். வீட்டு கவலைகள், பிள்ளைகளை பற்றிய தேவைகள் எல்லாவற்றையும் குடும்ப ஜெபம் செய்யும் போதோ அல்லது பிள்ளைகள் இல்லாத நேரத்தை பார்த்து, கலந்து ஆலோசித்து குடும்பத்திற்காக கருத்தாகவும் கணவனும் மனைவியும் இணைந்து ஜெபிக்க வேண்டும் அப்பொழுது சண்டை இல்லாத வீடாய் நம் வீடு காணப்படும்.

## 3. சுகபோகமாய் வாழ விரும்பக்கூடாது:

'சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தாள்"(1 தீமத் 5:6)

ஆம் பிரியமானவர்களே நம் வருமானத்தை காட்டிலும் அதிக செலவு செய்வதே சுக போக வாழ்க்கைக்கு அடையாளம். ஆகவே சுக போக வாழ்க்கையை தவிர்க்க நம்மை ஒப்பு கொடுத்து ஜெபிக்க வேண்டும், ஆடம்பர செலவுகளை தவிர்க்க ஒப்பு கொடுத்து ஜெபிக்க வேண்டும். வீண் செலவுகள் வராதபடி விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். மாத்திரமல்ல தேவனுடைய ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும். பாருங்கள் சாலொமோன் ராஜா (1 இராஜாக்கள் 3:9)ல் ஞானமுள்ள இருதயத்தைதரும்படி ஜெபித்தார். தேவன் அவர் கேட்காத ஐசுவரியத்தையும் மகிமையும் தந்ததாக வேதத்தில் பார்க்கிறோம். நாமும் கூட குடும்ப வருமானத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்கிற ஞானத்தை பெண்களாகிய நாம் கட்டாயம் தேவனிடமிருந்து ஜெபித்து பெற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாக காணப்படுகின்றது. அப்பொழுது நாமும் கூட (நீமொழிகள் 31: 28-30)ன் படி 'அவள் பிள்ளைகள் எழும்பி, அவளை பாக்கியவதி என்கிறார்கள் ........கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள்" ஆமென்

தேவ கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக!

## மனிதன் மனிதனாக வாழ 13 அம்சங்கள்

1. மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
2. மிகவும் வேண்டியது - பணிவு
3. மகிவும் வேண்டாதது - வெறுப்பு
4. மிகப்பெரிய தேவை - நம்பிக்கை
5. மிகக் கொடிய நோய் - பேராசை
6. நம்பக் கூடாதது - வதந்தி
7. ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
8. செய்ய கூடியது - உதவி
9. செய்யகூடாதது - நம்பிக்கை துரோகம்
10. விலக்க வேண்டியது - சோம்பேரித்தனம்
11. உயர்வுக்கு வழி - உழைப்பு
12. நழுவ விடக்கூடாதது - வாய்ப்பு
13. மறக்க கூடாதது - நன்றி

தொகுப்பு கிறித்துவின் பணியில்
அன்பு சகோதரர்
S. ஆல்பர்ட்

## ஏல் ஆரிஷ் கல்வெட்டுகள்

எகிப்து என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது நைல் நதி, இந்த நதி தவிற சில நதிகளும் அங்கு உண்டு. இதில் முக்கியமான நதி ஏல் ஆரிஷ் (EL-ARISH) நதியாகும். இந்த நதிகரையில் ஏராளமான கல்வெட்டுகள் கிடைத்துள் -ளன. இதில் எகிப்தியர் மீது வந்த சில வாதைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

ஏல் ஆரிஷ் கல்வெட்டுகளில் எகிப்து தேசம் இருளில் மூழ்கியது. ஒருவரும் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வரமுடியவில்லை. ராஜாக்கள் மற்றும் பிரபுக்கள் அரண்மனை மாளிகைகளை விட்டு வெளியே வரமுடியாமல் தவித்தனர். கடவுள்களாக இருந்தாலும் மனிதர்களாக இருந்தாலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியவில்லை. அது மட்டுமல்லாமல் பயங்கரமான சூரைகாற்று மக்களை வாட்டியது என்றும் கூறப்பட்டுள்ளது.

# கடந்த 18/07/2015 அன்று நடைபெற்ற
# உபவாச ஜெப ஆராதனை












இடம் - சபை வீடு

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**
23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**
23711698 - 96646444

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**
99870126

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**
60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

**தங்களது ஜெப விண்ணப்பங்கள்**
**எதுவாக இருந்தாலும்**
**எங்களுக்கு தெரிவிக்கவும்**
**உங்களுக்காக ஜெபிக்க**
**ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.**

Photograph by Kevin McNeal

Private Circulation only